FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **157/2022**
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், இருக்கண்குடி காவல் நிலையம், குற்ற எண்.116/2021 |
| Accused | 1.திரு.இலட்சுமணபிரபு, த/பெ.லட்சுமணன்,<br>2.திரு.மகாலட்சுமி, த/பெ.லட்சுமணன்,<br>3.திரு.வேல்த்தாய், க/பெ.செல்வமணி,<br>4.திரு.கமலா, க/பெ.பொன்மாடன், |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– ன் கீழும்,<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– ன் கீழும், |
| Finding | 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– ன் கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| Sentence | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| 1. | இலட்சுமணபிரபு | இலட்சுமணன் | இந்து | தொழிலாளி | பெரியகொல்லபட்டி | 24 |
| 2. | மகாலட்சுமி | இலட்சுமணன் | இந்து | – | பெரியகொல்லபட்டி | 46 |
| 3. | வேல்த்தாய் | செல்வமணி | இந்து | – | பெரியகொல்லபட்டி | 39 |
| 4. | கமலா, | பொன்மாடன் | இந்து | – | பெரியகொல்லபட்டி | 41 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehen sion of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanatio n of delay (16) |
| 18.09.2021 | 26.09.2021 | A1-26.09.2021 A2-13.10.2021 A3-13.10.2021A4-12.11.2021 | A1-12.10.2021 A2-13.10.2021 A3-13.10.2021A4-12.11.2021 | 30.08.2022 | 26.03.2026 | 30.03.2026 | |

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:11 +0530

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :- 05.07.2022

குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள்:- 05.07.2022

இதன் நகல் :- மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:23 +0530

Judicial Magistrate, No.II Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 157/2022
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், இருக்கன்குடி காவல் நிலையம், குற்ற எண்.116/2021 |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | 1) இலட்சுமணபிரபு,<br>த/பெ.இலட்சுமணன்,<br>1/290, கிழக்கு தெரு,<br>பெரியகொல்லபட்டி,<br>சாத்தூர்.<br>2)மகாலட்சுமி,<br>க/பெ.இலட்சுமணன்,<br>1/304, கிழக்கு தெரு,<br>பெரியகொல்லபட்டி,<br>சாத்தூர்.<br>3) வேல்த்தாய்,<br>க/பெ.செல்வமணி,<br>1/304, பிள்ளையார்கோவில் தெரு,<br>பெரியகொல்லபட்டி,<br>சாத்தூர்.<br>4) கமலா,<br>க/பெ.பொன்மாடன்,<br>2/48, கிழக்கு தெரு,<br>பெரியகொல்லபட்டி,<br>சாத்தூர் தாலுகா |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 18.09.2021 |
| 8. | புகார் தேதி (Complaint) | 26.09.2021 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | A1-26.09.2021<br>A2-13.10.2021<br>A3-12.11.2021<br>A4-13.10.2021 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1-12.10.2021<br>A2-13.10.2021<br>A3-12.11.2021<br>A4-13.10.2021 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 30.08.2022 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 26.03.2026 |



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:30 +0530

| | | |
|---|---|---|
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– ன் கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 26.03.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மணிவண்ணன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## <u>தீர்ப்புரை</u>

1. **<u>குற்றச்சாட்டு</u> :–**

**1.1.** 8.09.2021ம் தேதி 20.30 மணிக்கு நிகழ்நிலை புகார்தாரர் தனது வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்த போது கையில் இரும்பு பைப்புடன் வந்த 1வது எதிரி இலட்சுமணபிரபு, நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே நான் சுந்தலிங்கத்தின் போனை எடுத்தால் உனக்கு என்னடா நான் தான் திருப்பி கொடுத்துட்டேன்லடா அப்புறம் எதுக்குடா ஊரெல்லாம் சொல்லிக்கிட்டு திரியுற புண்ட மகனே என அசிங்கமாகவும் அருவருக்க தக்க வகையில் பேசியுள்ளார், அதற்கு நிகழ்நிலை புகார்தாரர் ஏன் இப்படி அசிங்கமாக பேசுகிறாய என கேட்டபோது அப்போது அங்கு வந்த 2 வது எதிரி மகாலட்சமி, 3 வது எதிரி வேல்த்தாய், 4 வது எதிரி கமலா ஆகியோர் நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து இந்த தேவிடியா மகனுக்கு இருக்கிற திமிருக்கு அடிச்சாதான்டா சரிவரும் என்று சொல்லவும் 1 வது எதிரி இலட்சுமணபிரபு கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் நிகழ்நிலை புகார்தாரரை அடித்து அவரது மூக்கில் எலும்பு முறிவுக்காயமான கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது அதனை



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:38 +0530

பார்த்த சாட்சிகள் சத்தம்போடவும் 1வது எதிரி இலட்சுமணக்குமார் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பை காட்டி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து இனிமேல் எனது விஷயத்தில் தலையிட்டால் உன்னை குடும்பத்துடன் கொலை செய்து புதைத்துவிடுவேன் என்று மிரட்டியும் மேலும் 2 வது எதிரி மகாலட்சமி, 3 வது எதிரி வேல்த்தாய், 4 வது எதிரி கமலா ஆகியோர் நிகழ்நிலை புகார்தாரரை இலட்சுமணபிரபு விஷயத்தில் தலையிட்டால் இலட்சுமணபிரபுவை வைத்து கொலை செய்துவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக, 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– ன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :–

இவ்வழக்கில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207– இன் கீழ் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :–

**3.1.** எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

**3.2.** இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– ன் படி குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரிகளங பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–

பட்டியல் சாட்சிகளில் இருந்து 1 நபரும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.லட்சுமணக்குமார் என்பவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரை அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்றுபொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:44 +0530

5.1. 18.09.2021–ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணி அளவில், அ.சா.1 – மாரியப்பன் பெரிய கொல்லப்பட்டியில் உள்ள தன்னுடைய வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு கையில் இரும்புப் பைப்புடன் வந்த ஒன்றாவது எதிரி லட்சுமண பிரபு, அ.சா.1 – மாரியப்பனை அருவருப்பாகப் பேசினார். "ஏன் பொது இடத்தில் இவ்வாறு அசிங்கமாகப் பேசுகிறாய்?" என்று அ.சா.1 – மாரியப்பன் கேட்டபோது, அங்கு வந்த எதிரிகள் மகாலட்சுமி, வேலுத்தாய் மற்றும் கமலா ஆகிய மூன்று பேரும், "இந்தத் தேவிடியா மகனுக்கு ரொம்ப திமிர் இருக்கு, இவனை அடித்தால்தான் சரிவரும்" என்று சொன்னார்கள். உடனே, ஒன்றாவது எதிரி லட்சுமண பிரபு தான் கையில் வைத்திருந்த இரும்புப் பைப்பால் அடிக்க முயன்றார். அ.சா.1 – மாரியப்பன் அதிலிருந்து விலகவே, அந்தப் பைப் அவரது மூக்கில் பட்டு, ரத்தம் வந்தது. அதைப் பார்த்த அ.சா.1 – மாரியப்பனின் உறவினர்கள் வந்து சத்தம் போடவும், லட்சுமண பிரபு கையில் வைத்திருந்த இரும்புப் பைப்பைக் காட்டி, "இனிமேல் என் விஷயத்தில் தலையிட்டால் உன்னை குடும்பத்துடன் கொலை செய்து புதைத்து விடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்தார்.

5.2. தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 108 அவசர ஊர்தி மூலம் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கும் அ.சா.1 – மாரியப்பன் சென்றார். 26.09.2021–ஆம் தேதி காலை 8.00 மணிக்கு அ.சா.1 – மாரியப்பன் இருக்கன்குடி காவல் நிலையத்திற்குச் சென்று, உதவி ஆய்வாளர் சசிகுமாரிடம் புகார் மனு (அ.சா.ஆ.3) கொடுத்தார். அதன் அடிப்படையில், குற்ற எண் 116/2021–ன் கீழ் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii) ஆகிய குற்றங்களுக்காக முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு செய்யப்பட்டது. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் சசிகுமார், 26.09.2021–ஆம் தேதி காலை 9.15 மணிக்குச் சம்பவ இடத்திற்குச் சென்று, சாட்சிகள் முன்னிலையில் 'பார்வை மகஜர்' (அ.சா.ஆ.5) மற்றும் 'மாதிரி வரைபடம்' (அ.சா.ஆ.6) தயாரித்தார். அவர் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

5.3. 1வது எதிரியை கைது செய்து விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தைச் (அ.சா.ஆ.7) சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து, அதன் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த இரும்புப் பைப்பைக் கைப்பற்றினார். கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்து பொருளைப் படிவம் 91 (அ.சா.ஆ.9) மூலமும், எதிரியை காவல் அடைப்பிற்கும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திவ்யா மற்றும் அரவிந்த் பாபு ஆகியோரை விசாரித்து, அவர்கள் வழங்கிய


S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:51 +0530

விபத்து பதிவேடு (அ.சா.ஆ.10) மற்றும் காயச்சான்றினைப் (அ.சா.ஆ.11) பெற்றுக்கொண்ட உதவி ஆய்வாளர் சசிகுமார், மருத்துவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அ.சா.1 – மாரியப்பனுக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால், வழக்கின் சட்டப் பிரிவுகள் இந்திய தண்டனைச் சட்டம் 294(b), 326 மற்றும் 506(ii) ஆகிய குற்றங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.12) மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

**6.** **<u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவர்களிடம் விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

**7.** **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–**

எதிரி மீது 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8.** **<u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–**

8.1. இந்த வழக்கில் காயமடைந்த நபரும் புகார்தாரருமான மாரியப்பன், அரசு தரப்பில் முதலாவது சாட்சியாக (PW–1) விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 – மாரியப்பன் தன்னுடைய சாட்சியத்தில், சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இரவு 7.00 மணிக்கு அவர் வீட்டில் இருந்தபோது வீட்டுக்கு வெளியே சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது என்றும், அவர் அங்கு சென்றபோது கூட்டமாக இருந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களை விலக்கிவிட்டபோது கம்பி தன்னுடைய மூக்கில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அந்த காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றும் அ.சா.1 – மாரியப்பன் கூறியுள்ளார்.

8.2. அ.சா.1 – மாரியப்பன் இந்த வழக்கில் கொடுத்த புகார் மற்றும் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கு முரணாகச் சாட்சியம் அளித்ததால், அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்தபோதிலும், அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகச் சாட்சியங்கள் எதுவும் பெறப்படவில்லை. அ.சா.1 –



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:48:57 +0530

மாரியப்பன் தன்னுடைய முதல் விசாரணையில், அவர் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாகவும், சமாதானமாகச் செல்ல எதிரிகள் அவரை மிரட்டவோ அல்லது கட்டாயப்படுத்தவோ இல்லை என்றும், எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் தான் கையொப்பம் இட்டுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அரசு தரப்பில் இதர சாட்சிகள் விடுவிக்கப்பட்ட நிலையில், கூடுதல் சாட்சியாக உதவி ஆய்வாளர் லட்சுமண குமார் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் செய்யப்பட்ட புலன் விசாரணை தொடர்பான விவரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

8.3. அ.சா.1 – மாரியப்பன் இந்த வழக்கில் கொடுத்த புகாரில் உள்ளது தன்னுடைய கையெழுத்துதான் என்று ஒப்புக்கொண்ட போதிலும், அந்தப் புகாரைப் படித்துப் பார்க்கவில்லை என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகாரை அ.சா.1 தான் கொடுத்தாரா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1ன் சாட்சியம் மூலம் புகார் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

8.4. தவிர, அ.சா.1 தற்போது எதிரியுடன் சமாதானமாகி விட்டதாகவும், சமாதானமாக செல்ல எதிரி அவரை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு கூடுதல் சாட்சியாக உதவி ஆய்வாளர் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. இந்த சூழ்நிலையில், புலன்விசாரணை கோப்புகளை பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்ய போதுமானதல்ல.

8.5. இதன் மேலே பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

**9. <u>முடிவு:–</u>**

**9.1.** 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 506(2) இ.த.ச– கீழும் வனைந்துள்ள



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.30 19:49:04 +0530

குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்.

**9.2.** இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** பி.ஆர். எண். 460/201 ல் உள்ள 55 செ.மீ நீளமுள்ள இரும்பு பைப்-1 மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 30.03.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.30 19:50:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

<u>பிற்சேர்க்கை</u>

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மாரியப்பன் |
| அ.சா.2 | திரு. லட்சுமணக்குமார் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.09.2021 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 23.03.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 26.09.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 26.09.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 26.09.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 26.09.2021 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.7 | 26.09.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 | 26.09.2021 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.9 | 26.09.2021 | படிவம்-91 |
| அ.சா.ஆ.10 | 18.09.2021 | சாத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட அ.சா.1 க்கான விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 18.09.2021, 07.10.2021 | விருதுநகர் அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட அ.சா.1 க்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.12 | 07.10.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.30 19:49:10 +0530

**<u>3. அரசு தரப்பு சான்று பொருள்</u> :–**

1) இரும்பு பைப்–1

**<u>4. எதிரி தரப்பு சாட்சிகள்</u> :–** இல்லை

**<u>5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> :–** இல்லை

**<u>6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்</u> :–** இல்லை

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:49:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**<u>குறிப்பு</u> :–**

**1.** விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.